PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 1 - 2014

HIGHER MOTHER TONGUE – TAMIL

PRIMARY 6 HMT

Name : ____________________

Class : Pri 6 __________

Date : ________________

Total Tims : 1h 20 mins

24 Questions

60 Marks

INSTURCTIONS

Do not open the booklet until you are told to do so.

Follow all instructions carefullu.

Answer all questions.

MORE TESTPAPERS AVAILABLE FOR DOWNLOAD AT
TESTPAPERSFREE.COM

பள்ளி

தொடக்கநிலை 6

உயர்தமிழ்

அரையாண்டு தேர்வு – I

கட்டுரை

மதிப்பெண்: 40
நேரம்: 50 நிமிடங்கள்

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரை வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**'சண்டையில் நடந்து முடிந்த ஒரு விழா'**

நீ உன் நண்பனின் பிறந்தாநாள் விழாவுக்குச் சென்றாய். பிறந்த நாள் கொண்டாடத்தின் போது திடீரென்று ஒரு சண்டை ஏற்படுகிறது. அதைப் பற்றி விவரித்துக் கூறுவதோடு இறுதியில் என்ன நடந்தது என்பதையும் உன் கட்டுரையில் எழுது.

**வினா 2**

பின்வரும் தொடக்க வரிகளைப் பயன்படுத்தி ஒரு கட்டுரை எழுது.

பள்ளி முடிந்துவிட்டது. நான் தயங்கித் தயங்கி அந்தச் சந்து வழியாக நடந்து வந்துகொண்டிருந்தேன். எப்போதும் போல அவன் என்னைத் துன்பப்படுத்த வருவானோ என்று என் மனம் அஞ்சியது. அப்போது.........................................

முற்றும்

## 'அ' பிரிவு

**A1** ***பிழை திருத்தம் ( 10 மதிப்பெண்கள் )***
***பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்திச் சரியான சொல்லைக் கீழ்க்காணும் கட்டத்தில் எழுது.***

சேகரன் இரண்டு நாள்களாகப் பள்ளிக்கு வரவில்லை. மோகன் பள்ளி *முடிந்த* வீடு திரும்பியதும் சேகரனுடன் தொலைபேசி மூலம் அழைத்துப் பேசினான். அப்போது, அவன் சேகரனுக்கு அம்மை நோய் கண்டிருந்தது என்பதை ***அறிவான்.*** மருத்துவர் தனக்கு இரண்டு வாரங்கள் விடுப்பு கொடுத்திருப்பதாகச் சேகர் மோகனிடம் வருத்தத்துடன் ***கூறினாள்.*** மோகன் அன்றுமுதல் ஒவ்வொரு நாளும் தவறாமல் சேகரனை அழைத்தான்; பள்ளியில் நடந்தவற்றைச் சொன்னான். மேலும், அவன் பாடங்களைப் பற்றி ***விலக்கிக்*** கூறினான். இரண்டு வாரங்கள் ***கழிந்தது.*** சேகரன் குணமடைந்து பள்ளிக்குச் சென்றான். அவனுக்காக மோகன் பள்ளியில் ஆவலுடன் காத்திருந்தான். சேகரன் மோகனைக் கண்டு தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தான்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |

**A2** <u>வாக்கியங்களை முடித்தெழுதுதல்</u> *(8 மதிப்பெண்கள்)*
*பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் இரு வாக்கியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் வாக்கியத்தின் கருத்தை மாற்றாமல் இரண்டாவது வாக்கியத்தை நிறைவு செய்து எழுது.*

Q6. நான் விடாமுயற்சியுடன் உழைத்ததால் வாழ்க்கையில் உயர்வடைந்தேன்.

நான் வாழ்க்கையில் உயர்வடைய ________________________________

________________________________________________.

Q7. மாணவர்கள் பல நூல்களைப் படித்துத் தங்களின் சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

ஒருவர் தன் சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்ள ________________

________________________________________________.

Q8. மக்கள் இணையத்தின் வாயிலாகப் பல புதிய தகவல்களைப் பற்றி அறிகிறார்கள்.

பல புதிய தகவல்களைப் பற்றி அறிய மக்கள் ____________________.

________________________________________________.

Q9. ரகு அடக்கத்துடன் நடந்து கொள்ளாததால், அவனுடைய நண்பர்கள் அவனை வெறுக்கிறார்கள்.

ரகுவுடைய நண்பர்கள் அவனை வெறுப்பதற்குக் காரணம் ______________

________________________________________________

**A3** *வேற்றுமை உருபுகள்* *(8 மதிப்பெண்கள்)*

*பின்வரும் பகுதியில் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொற்களுடன் பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பு.*

ஒரு நாள் அதியமான் தன் அரசவையில் அமைச்சர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். அச்சமயம் அங்கே ஒரு முனிவர் வந்தார். அரசன் எழுந்து (Q10) ________________ (அவர்) வணங்கினார். அம்முனிவர் மன்னனை நோக்கி, "வேந்தே! அரண்மனைக்கு அருகில் உள்ள மலையில் ஒரு கருநெல்லி மரம் இருக்கிறது. அதில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரே ஒரு பழம் பழுக்கும். அதன் சுவை (Q11) ________________ (அமுதம்) சுவையைப் போன்றது. மேலும், இக்கனியை உண்பவர் நோய் நொடியின்றி நீண்ட நாள் வாழ்வர். என்னைப் போன்ற முனிவர் இதனைத் தின்றே நீண்டகாலம் (Q12) ________________ (உயிர்) இருக்கின்றனர். ஆனால், இது கிடைப்பது அரிது. இன்று எனக்கு இப்பழம் கிடைத்தது. இதனை (Q13) ________________ (மன்னன்) அளித்தலே நன்று என்று எண்ணி எடுத்து வந்தேன். இதனை அருந்தி நீடுழி வாழ்வாயாக!" என்று பருத்து உருண்டு, திரண்டு விளங்கிய ஒரு கரு நெல்லிக்கனியை அவன் கைகளில் கொடுத்தார்.

**B4 கருத்தறிதல் (8 மதிப்பெண்கள்)**

*பின்வரும் பகுதியில் Q14 முதல் Q17 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற வாக்கியங்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்குரிய மிகப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் எண்ணைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுது.*

ஒரு வியாபாரி தொழில் காரணமாக வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. வெயில் கொளுத்தியதால் சற்று இளைப்பாற நினைத்து ஒரு மரத்தின் கீழ் அமர்ந்தான். அவன் தான் கொண்டு வந்த பழங்களையும் உணவுப் பொட்டலத்தையும் பிரித்துச் சாப்பிட்டான். இரு மாம்பழங்களைத் தின்றான். (Q14)______________________.

அச்சமயம் பூமியே அதிர்ந்து போகும்படிப் பேரிரைச்சலுடன் ஒரு பூதம், கையில் வாளை ஏந்திய வண்ணம் அவன் எதிரே தோன்றியது. ``நீ என் அருமை மகளைக் கொன்றுவிட்டாய். உன்னை நான் பூமியில் உயிருடன் நடமாட விடமாட்டேன். (Q15)______________________,`` என்று உரத்த குரலில் சொல்லிக்கொண்டே தன் கைவாளை ஓங்கியவாறு வியாபாரியைக் கொல்ல வந்தது.

இதைக்கேட்ட வியாபாரி பயந்து நடுங்கினான். ``நான் எப்போது உன் மகளைக் கொன்றேன்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! `` என்று கதறி அழுதான். ``நீ மாம்பழங்களைத் தின்றுவிட்டு அவற்றின் விதைகளைத் தூக்கி எறிந்தாய். (Q16)______________________. எனவே, நான் உன்னைக் கொன்றுவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன், `` என்று சொல்லியபடித் தன் கைவாளை மீண்டும் உயர்த்தியபடி அவனை நெருங்கியது. அதற்கு, (Q17) ______________________. என்னை மன்னித்து விடு,`` என்று வியாபாரி மன்றாடினான். அப்படி என்னை மன்னிக்க உனக்கு மனமில்லாவிட்டால், எனக்கு ஒரு வாரம் அவகாசம் கொடு. அதற்குள் நான் ஊருக்குச் சென்று, அங்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வருகிறேன்,`` என்று கெஞ்சிக் கேட்டான். பூதமும் அதற்குச் சம்மதித்தது.

(1) உன்னை மாயமாய் மறைய வைத்துவிடுவேன்.
(2) நான் வேண்டுமென்றே அவளைக் கொல்லவில்லை.
(3) பின் அவற்றின் விதைகளைச் சற்றுத் தூரத்தில் எறிந்தான்.
(4) அதனால், அவள் உயிர் ஊசலாடுகிறது.
(5) அவை என் மகளுடைய நெஞ்சில் பட்டதால், இறந்து போனாள்.
(6) பிறகு அவற்றின் தோலை சற்றுத் தூரத்தில் வீசினான்.
(7) இது எதிர்பாராமல் நடந்துவிட்டது.
(8) உன்னைக் கொன்றே தீருவேன்.

| விடை எண் | விடை |
|---|---|
| **Q14** | |
| **Q15** | |
| **Q16** | |
| **Q17** | |

**C5** சுயவிடைக் கருத்தறிதல் (26 மதிப்பெண்கள்)

| |
|---|
| பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது. |

மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிலர் அக்காய்ச்சலிலிருந்து விடுபட்டிருப்பதாக மருத்துவத் தகவல்தள் கூறியுள்ளன.

இருப்பினும் சுற்றுப்புற அமைச்சு `ஈஸ்ட் கோஸ்ட்` பகுதியில் தொடர்ந்து சோதனையை மேற்கொண்டு வருகிறது. `ஈஸ்ட் கோஸ்ட்` பூங்காவுக்குச் சென்று திரும்பிய சிலர் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து சுற்றுப்புற அமைச்சு அந்தப் பகுதியில் அக்காய்ச்சலுக்குக் காரணமான கொசுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் *தீவிரமாக* ஈடுபட்டுள்ளது.

மலேரியா காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், பொதுமக்கள் அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை என்று சுற்றுப்புற அமைச்சு கூறியது. சிங்கப்பூரில் மலேரியா காய்ச்சல் பாதிப்பு கிடையாது. ஆகவே, அந்தக் காய்ச்சல் பாதிப்பு இருக்கும் நாடுகளுக்குச் சுற்றுலா செல்லும் போது பாதுகாப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றுப்புற அமைச்சு வலியுறுத்துகிறது.

சிங்கப்பூரில் ஓராண்டில் மலேரியா பாதித்த மூன்றாவது இடம் `ஈஸ்ட் கோஸ்ட்` பூங்காவாகும். இதற்கு முன்னதாக பொங்கோல் பகுதியில் இருபது பேர் மலேரியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர். அதுமட்டுமல்ல சிராங்கூன் கார்டன், அங் மோ கியோ போன்ற குடியிருப்புப் பேட்டைகளிலும் கொசுக்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே செல்கிறது.

இதைக் கருத்திற்கொண்டே நம் அரசாங்கம் குடிமக்களுக்கு மலேரியா நோயைப் பரப்பும் கொசுக்களுக்குப் பற்றிய விழிப்புணர்வை ஏறபடுத்த பல தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வானொலி , தொலைக்காட்சியின் வழி கொசுக்களைப் பற்றிய பல செய்திகள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பள்ளிகளிலும் பொது இடங்களிலும் கூட மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் மலேரியாக் கொசுக்களை வளரவிடாமல் தடுக்க வழி வகைகள் கூறப்பட்டு வருகின்றன.

சிங்கப்பூரில் முதன் முதலில் "புலாவ் தக்கோங்" பகுதியில் சிலருக்கு மலேரியா காய்ச்சல் கண்டிருந்தது. அண்மையில் "ஈஸ்ட் கோஸ்ட்" பகுதிக்குச் சென்றவர்களில் யார் யாருக்கு மலேரியா காய்ச்சல் கண்டிருக்கிறது என்பதை அறிய சுற்றுப்புற அமைச்சு அந்தப் பகுதியில் வேலை செய்யும் **ஊழியர்களுக்கு** இரத்தப் பரிசோதனை செய்தது. இதுவரை ஆயிரம் பேரின் இரத்தம் சோதிக்கப்பட்டதில் ஒருவருக்கு மட்டும் அக்காய்ச்சல் தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அண்மையில் 'ஈஸ்ட் கோஸ்ட்' பகுதிக்குச் சென்றவர்களில் யாரேனும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகி மலேரியா காய்ச்சல் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகிறது.

வினாக்கள்:

Q18. மலேரியா நோயை ஒழிக்க, சுற்றுப்புற அமைச்சு எவ்வகையான பணியில் ஈடுபட்டுள்ளது? (3 மதிப்பெண்கள்)

Q19. சுற்றுப் பயணிகளுக்குச் சுற்றுப்புற அமைச்சு எதனை வலியுறுத்துகிறது? (4 மதிப்பெண்கள்)

Q20. சிங்கப்பூரின் எந்தெந்தப் பகுதிகளில் மலேரியா நோயைப் பரப்பும் கொசுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? (3 மதிப்பெண்கள்)

Q21. மலேரியா கொசுக்கள் பரவாமலிருக்க வேண்டும் என்ற செய்தி குடிமக்களுக்கு, நம் அரசாங்கத்தால் எவ்வாறு கொண்டு சேர்க்கப்படுகிறது? ( 4 மதிப்பெண்கள்)

Q22. இரத்தப் பரிசோதனை ஏன் நடத்தப்பட்டது? (4 மதிப்பெண்கள்)

Q23. 'ஈஸ்ட் கோஸ்ட்' பகுதிக்குச் செறவர்களுக்கு என்ன ஆலோசனை கூறப்பட்டது? ( 4 மதிப்பெண்கள்)

Q24 பொருள் எழுது ( 4 மதிப்பெண்கள்)

| |
|---|
| பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுது. |

அ. தீவிரமாக - ______________________ (2 மதிப்பெண்கள்)

ஆ ஊழியர்களுக்கு - ______________________ (2 மதிப்பெண்கள்)

~~~~~*முற்றும்*~~~~~
~~~~~

**P6 HMT**
**TESTPAPER 10**

<u>சேகரன் இரண்டு.........</u>

1. முடிந்து 2. அறிந்தான் 3. கூறினான் 4. விளக்கிக் 5. கழிந்தன

6. விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும்.

7. பல நூல்களைப் படிக்க வேண்டும்.

8. இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

9. அவன் அடக்கத்துடன் நடந்து கொள்ளாததே ஆகும்.

10. அவரை 11. அமுதத்தின் 12. உயிரோடு 13. மன்னனிடம்

14. 3 15. 8 16. 5 17. 2

18. மலேரியா நோயை ஒழிக்க சுறுப்புற அமைச்சு அந்நோய்க்குக் காரணமான கொசுக்களை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

19. சுற்றுப்பயணிகள் பாதிப்பு இருக்கும் நாடுகளுக்குச் சுற்றுலா செல்லும்போது பாதுகாப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றுப்புற அமைச்சு வலியுறுத்துகிறது.

20. சிங்கப்பூரின் புலாவ் தெக்கோங், ஈஸ்ட் கோஸ்ட், பொங்கோல் மற்றும் சிராங்கூன் கார்டன், அங் மோ கியோ ஆகிய பகுதிகளில் மலேரியா நோயைப் பரப்பும் கொசுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

21. வானொலி, தொலைக்காட்சியின் வழி கொசுக்களைப் பற்றிய பல செய்திகளை வலியுறுத்துவதன் மூலமும், பள்ளிகளிலும் பொது இடங்களிலும் மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் மலேரியாக் கொசுக்களை வளர விடாமல் தடுக்க வழிவகைகளைக் கூறுவதன் மூலமும் அரசாங்கம் குடிமக்களுக்கு மலேரியாக் கொசுக்கள் பரவாமலிருக்க வேண்டும் என்ற செய்தியை கொண்டு சேர்க்கிறது.

22. அண்மையில் ஈஸ்ட் கோஸ்ட் பகுதிக்குச் சென்றவர்களில் யார் யாருக்கு மலேரியா காய்ச்சல் கண்டிருக்கிறது என்று அறியவே இரத்தப் பரிசோதனை நடத்தப்பட்டது.

23. ஈஸ்ட் கோஸ்ட் பகுதிக்குச் சென்றவர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக மருத்துவரை அணுக ஆலோசனைக் கூறப்பட்டது.

24. அ. மும்முரமாக ஆ. பணியாட்களுக்கு.